







# பிறப்பு முதல் இறப்பு வரை கொள்கை பேசியவர்கள் நாம்!

**சே.மெ.மதிவதனி, துணைப் பொதுச் செயலாளர், திராவிடர் கழகம்**

**கழக இளைஞர் அணி சார்பில், பிப்ரவரி 15, 16-இல் நடைபெற்ற இளம் பேச்சாளர்களுக்கான இரண்டு நாள் பயிற்சி முகாமில் 'பெரியோர்களே தாய்மார்களே' என்னும் தலைப்பில், திராவிடர் கழகத் துணைப்பொதுச்செயலாளர் வழக்கறிஞர் சே.மெ.மதிவதனி ஆற்றிய உரை:**

“எனக்குக் கொடுக்கப்பட்டுள்ள தலைப்பு மேடைப்பேச்சு பயிற்சி. ஒரு மணி நேரம் பேச உரையைத் தயார் செய்து வந்தாலும், நிகழ்ச்சி அமைப்பாளர்கள் '10 நிமிடங்களில் முடித்துவிடுங்கள்' என்று கூறினால், அதற்குள் முடிக்க வேண்டும். அதுதான் பேச்சாளராவதற்கு முதல் தகுதி.

'பெரியோர்களே, தாய்மார்களே' என்று உரையைத் தொடங்குகிறோம். பெரியோர்களே என்றால், அவர்களை பெரிய இடத்தில் வைத்து பார்க்கிறோம் என்று அர்த்தம். பிறகு தாய்மார்களே என்று சொல்கிறோம். அப்படி என்றால் பெண்களை நாம் பெரிய இடத்தில் வைத்து பார்க்கவில்லையா? அந்தக் கேள்வி நமக்கு வர வேண்டும். ஆக, சொற்களில்கூட புதுமையை, புரட்சியைத் தேடக்கூடியவர்களாக இளம் பேச்சாளர்கள் இருக்க வேண்டும்.

பொதுக் கூட்டம், மாநாடு, தெருமுனைக் கூட்டம், அரங்க நிகழ்வுகள், திருமண மேடை, படத் திறப்பு, நினைவேந்தல் நிகழ்ச்சி, மாணவர்கள் சந்திப்பு, தொலைக்காட்சி விவாதங்கள், தேர்தல் பரப்புரை எனப் பல களங்கள் உள்ளன.

## விழாக்களில் எப்படிப் பேச வேண்டும்?

திராவிட இயக்கத்தினர் குழந்தைகளின் முதல் பிறந்தநாளை, 'பெயர் அறிமுக விழா' என்று கொண்டாடுவர். பிறந்தநாள் நிகழ்ச்சியில் உறவினர்கள், நண்பர்கள், உடன் பணி செய்பவர்கள் வந்திருப்பர். அவர்களிடம் என்ன பேச வேண்டும் என்றும், தந்தை பெரியார் சொல்லிக் கொடுத்துள்ளார்.

'இந்து குடும்பத்தில் பிறந்து இந்துவாக வளர்க்கப்பட்டால் நான் இந்து. இந்து குடும்பத்தில் பிறந்து கிறிஸ்தவர்களுக்குத் தத்து கொடுத்தால், நான் கிறிஸ்தவர், அங்கிருந்து இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்தவர்களுக்குத் தத்து கொடுத்தால், நான் இஸ்லாமியர். இதில் எதுவுமே இல்லாமல் நாத்திகக் குடும்பத்தில் பிறந்தால், எனக்கும் கடவுளுக்கும் தொடர்பே கிடையாது. ஆக, பிறக்கும் போது அனைத்துக் குழந்தைகளும் பகுத்தறிவாளர்கள்தான். அந்தக் குழந்தையிடம் நீங்கள் எதையும் கொண்டு வந்து திணிக்க வேண்டாம்' என்று பிறந்தநாள் நிகழ்ச்சியில் பேச கற்றுக்கொடுத்தவர் பெரியார்.



இதேபோல திருமண மேடைகள். திருமண நிகழ்வுகளில் சரியாக மதியம் 1 மணிக்குப் பேச அழைத்துவிட்டு, மறுபுறம் பந்தியைத் தயார் செய்து, பிரியாணி பரிமாற தொடங்குவர். பிரியாணி வாசம் பிடித்ததும், பார்வையாளர்கள் கொஞ்சம் கொஞ்சமாகக் கலையத் தொடங்குவார்கள். நாம் மேடையில் பேசி, அவர்களையும் கவர வேண்டும். இப்போது திருமண நிகழ்வுகளில், 10 நிமிடங்கள் கூட பேச முடிவதில்லை. ஆனால், செய்யாறு அருகில் உள்ள ஒரு ஊரில் திருமணத்தை நடத்தி வைத்து, பெரியார் 5 மணி நேரம் வரை பேசியுள்ளார். இதுகுறித்து, சுப.வீ சொல்வார், 'பெரியார் ஐந்து மணி நேரம் பேசினார் என்பது எனக்கு வியப்பில்லை. ஆனால், மக்கள் ஐந்து மணி நேரமும் அமர்ந்து கேட்டுள்ளனர் என்றால், பெரியார் எப்படி பேசியிருப்பார் என்று பாருங்கள்' என்று. அப்படி நாம் திருமண மேடைகளை நம் கொள்கைகளைச் சொல்லப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

உலக வரலாற்றில் முதல் பிறந்தநாள் விழா தொடங்கி திருமண நாள், துக்கநிகழ்வு வரை கொள்கை பேசிய ஒரே இயக்கம் திராவிடர் இயக்கம் மட்டும்தான்.

## மாணவர்களுடன் பேசி இணக்கமாவது எப்படி?

மாநாடுகளில் பேசுகிறோமோ இல்லையோ பள்ளி, கல்லூரிகளில் பேச அழைப்பு வந்தால், தட்டிக் கழிக்க வேண்டாம். அங்கு நாம் பெரியார், அண்ணா, கலைஞர், முதல்வர் மு.க.ஸ்டாலின் என்றெல்லாம் நேராகப் பேசிவிட முடியாது. அங்கு பேசுவதற்கு ஏற்றவிதத்தில், நாம் தயாராக வேண்டும்.

கல்லூரிக்குச் சென்றவுடன் மாணவர்கள் மனநிலை என்னவென யூகிக்க வேண்டும். கல்லூரி முதல்வர் பேசும்போது, எந்த விஷயத்திற்குத் கைதட்டுகிறார்கள் என்று பார்க்க வேண்டும். இதையெல்லாம் கவனித்து சூழ்நிலைக்கு ஏற்ப, அதேநேரத்தில் துருத்தாமல் நமது கொள்கைகளையும் சொல்லிவிட வேண்டும்.

## தேர்தல் பரப்புரையில் எப்படிப் பேசுவது?

தேர்தல் பரப்புரைக்குப் பெரிய மேடை அமைத்து போடியம், மைக், இரு பக்கமும் ஏர் கூலர் வசதி செய்துகொடுத்து, பேச அழைக்க மாட்டார்கள். ஒரு வாகனமும், ஒரு மைக்கும் தருவார்கள். அந்த மைக்கும் நீங்கள் கத்திப் பேசினால், 50 பேருக்குதான் கேட்கும்படி இருக்கும். வாகனத்தில் ஏறி மைக்கைப் பிடித்ததும், நாம் பழைய வரலாற்றை முழுக்கச் சொல்லி ஆரம்பிக்கக்கூடாது.

குறிப்பிட்ட ஊருக்கு கழகம் ஒரு முக்கியத் திட்டத்தை நிறைவேற்றி தந்திருக்கும். உங்களைப் பேச அழைத்த கழக நிர்வாகி ஊர் மக்களுக்கு ஏதாவது செய்திருப்பார். அதுபற்றி பேசினால்தான் பொது மக்கள் நம்மைத் திரும்பிப் பார்ப்பார்கள்.

## ஒவ்வொரு மேடையும் ஒவ்வொரு விதம்

ஒவ்வொரு மேடையும் ஒவ்வொரு விதமாக இருக்கும். நீங்கள் ஒரே மனநிலையுடன் செல்லக் கூடாது. சேலத்தில் நடந்த தி.மு.க. இளைஞர் அணி மாநாட்டில் 10 லட்சம் பேர் முன்பு பேசினேன். அதற்கு ஒரு வாரம் முன்பு, திருத்தணியில் ஒரு நிழற்குடையில் நின்றுகொண்டு தெருமுனைக் கூட்டத்தில் பேசினேன். பார்வையாளர்கள் யாரும் இல்லை. அங்கு பேருந்துக்காக காத்திருந்தவர்கள் முன்பு, ஒருமணி நேரம் வரை பேசிவிட்டு கொள்கையைக் கொண்டு சேர்த்தோம் என்ற திருப்தியுடன் வந்தேன். வசதிகள் உள்ள மேடையில்தான் பேசுவேன் என இளம் பேச்சாளர்கள் இருக்கக் கூடாது. எந்த மேடையாக இருந்தாலும், பயன்படுத்தத் தெரிய வேண்டும்.

## எதிர் தரப்பினரை எப்படி எதிர்கொள்ள வேண்டும்

பேச்சாளர்களுக்கு சமயோசிதப் புத்தி (Presence Of Mind ) இருக்க வேண்டும். ஒரு தொலைக்காட்சி விவாதத்தில் நடிகை கஸ்தூரி, 'பார்ப்பனர் அல்லாதார் வந்த பிறகே அரசுத் துறைகளில் ஊழல் வந்துவிட்டது' என்று சொன்னார். உடனே நான் 'சித்ரா ராமகிருஷ்ணனைப் பற்றி கஸ்தூரி பேசுகிறார், பேசட்டும் விடுங்கள்' என்று சொல்லிவிட்டேன். அதுபோல உடனுக்குடன் பதில் சொல்ல நாம் பழக வேண்டும்.

## உரை தயாரிப்பு

மேடைப்பேச்சுக்கான உரை தயாரிப்பதற்கு முன்பு 'தலைப்பு' குறித்து நமக்கு ஒரு சிந்தனைத் தெளிவு இருக்க வேண்டும். அந்தத் தலைப்பு குறித்து நிறைய வாசிக்க வேண்டும். மற்ற கட்சிக் கூட்டங்களுக்குச் சென்று, எளிதில் பேசிவிடலாம். ஆனால், திராவிட இயக்க மேடைகளில் பேசுவது கடினம். ஏனெனில், இங்கு பேசுபவர் மட்டும் சிந்தனையாளர் இல்லை. கேட்கிறவர்களும் சிந்தனையாளர்களாக இருப்பார்கள். எனவே, ஒவ்வொரு மேடையையும் முதல் மேடையாகவே நினைத்து உரை தயாரித்தால் மட்டுமே, நீண்ட காலம் பேச்சாளராக இருக்க முடியும்.

பேச்சில் எப்போதும் புதிய கோணங்களை முன்வைக்க வேண்டும். நம் கல்வி உரிமை மறுப்பு, புதிய கல்விக் கொள்கை, ஒன்றிய அரசு ரூ.2152 கோடி தர மறுப்பது ஆகியவை அனைத்தும் ஒரே பிரச்சினைதான். அதனை யார் யார் எப்படி மக்கள் முன் பேசுகிறோம் என்பதில் தான் வித்தியாசப்படுவோம்.

எப்போது எல்லாம் வாசிக்கிறீர்களோ அப்போது எல்லாம் குறிப்புகள் எடுக்கவேண்டும். எப்போது எல்லாம் இன்னொருவர் உரையைக் கேட்கிறீர்களோ அப்போது எல்லாம் குறிப்பு எடுக்க வேண்டும். இவை உடனடியாகப் பயன்படாவிட்டாலும், எப்போதாவது ஒருநாள் உங்களால் குறிப்புகள் எடுக்க முடியாத சூழல் உருவாகும். அந்த நேரத்தில் முன்பு எடுத்து வைத்த குறிப்புகள் உங்களுக்குப் பயன்படும்.

## பதிலடிகள் நாகரீகமாக இருக்க வேண்டும்

நமது எதிர் தரப்பின் அவதூறுகள், பொய்ப்பிரச்சாரங்களுக்குத் தகுந்த பதிலடி கொடுக்க வேண்டியதும் முக்கியம். அதற்கான தகவல்களைச் சேகரித்து வைத்து தேவையான நேரத்தில் அதனைப் பயன்படுத்த வேண்டும். உதாரணமாக ஊடக விவாதத்தில் சென்று அமரும்போது, குஜராத் முதல்வராக மோடி இருந்தபோது, ஜி.எஸ்.டி. வரியை எதிர்த்தார். இப்போது எதற்காக ஆதரிக்கிறார் என்று கேள்வி கேட்க வேண்டும் எனில், தகவல்களைச் சேகரித்து, அதனை இடத்திற்குத் தகுந்தாற்போல பயன்படுத்த வேண்டும். பதிலடிகள் நாகரீகமான முறையில் இருக்க வேண்டும். மேடையில் ஒருமையில் பேசக்கூடாது. நாம் விமர்சனம் செய்யும் நபரை நமக்குப் பிடிக்கவில்லை என்றாலும்கூட, மரியாதைக்குரிய வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டும்.

> **“பேரறிஞர் அண்ணா 'வீரர்கள் தேவை' என்று எழுதினார். அதை எழுதிவிட்டு 'ஆரியத்திடம் அடி பணியாத வீரர்கள் தேவை' என்று சொன்னார். அதற்குள் ஆயிரம் பொருள் உள்ளது!“**

## பேச்சாளருக்கான முக்கிய தகுதி - தன்வயப்படுத்துதல்

அடுத்து பேச்சாளருக்கு இருக்க வேண்டிய மிகப்பெரிய தகுதி என்னவென்றால், தன்வயப்படுத்துதல். நீங்கள் பேசும்போது பார்வையாளர்கள் திசைதிரும்ப விடக்கூடாது, உங்கள் பக்கம் தன்வயப்படுத்தி வைத்திருக்க வேண்டும்.

1938 -ஆம் ஆண்டு ஆகஸ்ட் 1 முதல் செப்டம்பர் 11 வரை திருச்சியிலிருந்து இந்தி எதிர்ப்புப் படை கிளம்புகிறது. முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் அது. தந்தை பெரியார் அதனை முன்னெடுக்கிறார். இந்தி எதிர்ப்புப் படையில் 100 பேர் இருந்தனர். அவர்களில் 99 பேர் ஆண்கள், ஒரே ஒரு பெண் மூவலூர் ராமாமிர்தம் அம்மையார்.

இந்தி எதிர்ப்புப் படை ஓர் ஊருக்குச் செல்லும்போது, அங்கு முழுவதுமாக செருப்புத் தோரணமாக இருக்கிறது. பட்டுக்கோட்டை அழகிரி உடன் வந்தவர்கள், 'திரும்பிச் சென்றுவிடலாம்' என்று கூறுகிறார்கள். ஆனால், பட்டுக்கோட்டை அழகிரி ஊருக்குள் சென்று, 'சிறப்பாக செருப்பை தோரணமாக கட்டியுள்ளீர்கள். தோரணமாக கட்டியதற்கு பதிலாக எங்களிடம் கொடுத்திருந்தால், அதனைக் காலில் போட்டுக் கொண்டு இந்தியை எதிர்க்க இன்னும் பல மைல் தூரம் பயணித்திருப்போம்' என்று சொல்கிறார்.

அடுத்து அவர் கூறியதுதான் முக்கியம். இந்தச் செருப்பைத் தோரணமாக கட்டியவர் ஒருநாள் இறந்துவிடுவார். நானும் இறந்து போவேன். இருவருக்கும் சமாதி இருக்கும். என் சமாதியைப் பார்த்து, 'எங்கள் மான வாழ்வுக்காக உயிரைக் கொடுத்த தொண்டர்' என்று சொல்வார்கள். உன் சமாதிக்கு, உன் அடுத்த தலைமுறை கூட வராது. காக்கையும் கழுகும் எச்சமிட்டுச் செல்லும் என்று சொன்னதுதான் தன்வயப்படுத்துதல்.

## 'வீரர்கள் தேவை' என்று எழுதிய அண்ணா

பேரறிஞர் அண்ணா 'வீரர்கள் தேவை' என்று எழுதினார். அதை எழுதிவிட்டு 'ஆரியத்திடம் அடி பணியாத வீரர்கள் தேவை' என்று சொன்னார். அதற்குள் ஆயிரம் பொருள் உள்ளது. பணத்திற்கு, எதிர்தரப்பினரின் பேரத்திற்கு, அடிபணியாதவர்களாக இருக்க வேண்டும். நாம் போர்ப்படைத் தளபதிகளைப் போல வீரர்களாக இருக்க வேண்டும். இறுதி நொடியில், நாம் திராவிட இயக்கத்தில் இருந்து மறைந்தார்கள் என்ற உணர்வோடு சாக வேண்டும். அந்த உணர்வைத் தந்தவர் அண்ணா.

## நகைச்சுவை ததும்ப பேச கலைஞர் உரையைக் கேளுங்கள்

நகைச்சுவையாகப் பேசுவதற்கு குறிப்புகள் வேண்டும் என்றால், நாம் கலைஞரின் உரையைக் கேட்டால் போதும். சட்டமன்றத்தில் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இருப்பர். ஒரு சமயம் சட்டமன்றத்தில் சுதர்சனம், தி.மு.க. ஆட்சியின் 100 நாள் சாதனையைப் பற்றி பேசுகிறார். 100 நாட்களில் இமாலய சாதனை என்று அவர் பேச ஆரம்பித்த உடன், எதிர் தரப்பில் இருந்த செங்கோட்டையன் ஏதோ கேள்வி எழுப்பியுள்ளார்.

உடனே குறுக்கிட்ட கலைஞர், 'செயின்ட் ஜார்ஜ் கோட்டையின் சாதனையைப் பற்றி பேசினால் செங்கோட்டைக்கு ஏன் இவ்வளவு கோபம் வருகிறது” என்று சொல்லி எதிர் தரப்பை வாயடைக்க வைத்தார். வெறுமனே சிரிக்க வைப்பது நகைச்சுவை அல்ல. அதில் ஆழமான சிந்தனையும் கலந்து இருப்பதுதான் உண்மையான நகைச்சுவை கலந்த பேச்சு. அதைச் செய்துகாட்டியவர் கலைஞர்.

## மக்களைத் தன்வயப்படுத்தும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

நம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மேடையில் பார்வையாளர்களின் எண்ண ஓட்டம் தெரிந்துதான் பேசத் தொடங்குவார். பெரியார் திடலில் முதலமைச்சருக்கு பெரியாரின் கைத்தடியை ஆசிரியர் கி.வீரமணி கடந்த ஆண்டு பரிசாகக் கொடுத்தார். அவருக்குச் சொல்லாமல் இன்ப அதிர்ச்சியாக அந்தப் பரிசு தரப்பட்டது. அவர் முதலமைச்சர் என்பதால், சொற்களில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். அப்போது, 'இது போதும் எனக்கு. இதனை விட வேறு என்ன எனக்குக் கிடைத்துவிடப் போகிறது' என்று ஒரே வார்த்தைதான் சொன்னார். அதுதான் பேச்சாளருக்கு இலக்கணம். ஒரே நிமிடத்தில் விஷயத்தை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும்.

## உதயநிதி ஸ்டாலினின் 'செங்கல்' பரப்புரை தந்த ஈர்ப்பு

எய்ம்ஸ் பிரச்சினை பற்றி எல்லோரும் பேசி விட்டார்கள். இனியும் பேசப் போகிறோம். ஆனால், அண்ணன் உதயநிதி ஸ்டாலினின் செங்கல் தூக்கியபடி பேசிய பேச்சைத் தாண்டி, இதுவரை ஒரு ஈர்ப்பு மிகுந்த பேச்சு எய்ம்ஸ் தொடர்பாக வரவில்லை. ஆக, பேச்சாளர்களின் பேச்சு என்பது, தனது உரையைத் தாண்டி சிறந்த உரை வேறு எதுவும் இல்லை என்பது போல இருக்க வேண்டும். அப்படிப்பட்ட பேச்சாளர்களாக உருவாகுங்கள்.

நாம் பேச்சாளர்கள் என்பதற்கு முன்பே கொள்கையாளர்கள் என்ற எண்ணத்தோடு இளம் பேச்சாளர்கள் மேடைகளில் பேச வேண்டும். நன்றி.”